# தவளையும் கொக்கும்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# தவளையும் கொக்கும்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# தவளையும் கொக்கும்





ஒரு காட்டின் நடுவே அழகிய குளம் ஒன்று இருந்தது. அந்தக் குளத்தில் தவளை ஒன்று வசித்து வந்தது. தினமும் தண்ணீர் குடிக்க கொக்கு ஒன்று அந்தக் குளத்திற்கு வரும். நாளடைவில் கொக்கும் தவளையும் நெருங்கிய நண்பர்களாயின. கொக்கு தினமும் தவளையைச் சந்தித்து தான் சென்ற இடங்களைப் பற்றிக் கூறும். இருவரும் ஒருவருக்கொருவர் பேசி மகிழ்ச்சி அடைவர்.



சில நாட்கள் சென்றன. கோடைகாலத்தில் குளம் வற்றத்தொடங்கியது. தவளை மிகவும் வருந்தியது.” கொக்கிடம் தண்ணீர் வற்றிவிட்டால் நான் இறந்துவிடுவேன்” என்று கூறி அழுதது. கொக்கு, “நண்பனே! கவலைப்படாதே, நான் உனக்கு உதவி செய்கிறேன்” இங்கிருந்து சற்றுத் தொலைவில் நீர் நிறைந்த பெரிய குளம் இருக்கிறது. நான் உன்னை அங்கு அழைத்துச் செல்கிறேன் என்று கூறியது.



அதற்கு தவளையோ! "நான் எப்படி வருவேன்?" என்று கொக்கிடம் கேட்டது. கொக்கு நீண்ட குச்சி ஒன்றை எடுத்தது. அந்தக் குச்சியின் ஒரு பக்கத்தினை நன்றாக பிடிக்குமாறு தவளையிடம் கூறியது. பின்பு மறு பக்கத்தினைக் கொக்கு தன் கால்களால் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு பறந்தது. இருவரும் அக்குளத்திற்குச் சென்றனர்.





# கதையின் நீதி

சூழ்நிலை அறிந்து உதவும் நண்பனே உண்மையான நண்பன்!.



சூழ்நிலை அறிந்து உதவும் நண்பனே உற்ற தோழன்.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.worldtamilacademy.com